**செய்தி வெளியீடு எண்: 604** **நாள்: 11.10.2012**

## செய்தி வெளியீடு

மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.10.2012 அன்று தலைமைச் செயலகத்தில், நகராட்சிகள் மற்றும் தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான பணியாளர்களின் வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் பணிநியமன ஆணைகளை வழங்கினார்கள். மேலும், சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவு நீர் அகற்று வாரியத்திற்கு வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் தேர்வு செய்யப்பட்ட உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை வழங்கினார்கள்.

நகராட்சிகளில் பணிபுரிந்து, பணிக்காலத்தில் காலமான 61 பணியாளர்களின் வாரிசுதாரர்கள், தமிழ்நாடு குடிநீர் மற்றும் வடிகால் வாரியத்தில் பணிபுரிந்து பணிக்காலத்தில் காலமான 81 பணியாளர்களின் வாரிசுதாரர்கள், என மொத்தம் 142 வாரிசுதாரர்களுக்கு கருணை அடிப்படையில் இளநிலை வரைவு அலுவலர், இளநிலை உதவியாளர், வருவாய் உதவியாளர், பதிவுரு எழுத்தர், அலுவலக உதவியாளர் மற்றும் காவலர் என பல்வேறு பணிகளுக்கான நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.10.2012 அன்று வழங்கினார்கள்.

சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்தில் தேவையான பொறியாளர்களும், பணியாளர்களும் இருந்தால் தான் பொதுமக்களுக்கான அடிப்படைப் பணிகள் எவ்விதத் தொய்வுமின்றி மேற்கொள்ள முடியும் என்பதைக் கருத்தில் கொண்ட மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் உதவி பொறியாளர்களைத் தேர்வு செய்து பணியமர்த்துமாறு உத்தரவிட்டார்கள்.

அவ்வகையில், வேலைவாய்ப்பு அலுவலகம் மூலம் சென்னை பெருநகர் குடிநீர் வழங்கல் மற்றும் கழிவுநீர் அகற்று வாரியத்திற்கு தேர்வு செய்யப்பட்ட 40 உதவி பொறியாளர்களுக்கு பணி நியமன ஆணைகளை மாண்புமிகு தமிழக முதலமைச்சர் செல்வி ஜெ ஜெயலலிதா அவர்கள் 9.10.2012 அன்று வழங்கினார்கள்.

இந்நிகழ்ச்சியில், மாண்புமிகு நகராட்சி நிர்வாகம் மற்றும் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர், தலைமைச் செயலாளர், நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை கூடுதல் தலைமைச் செயலாளர் மற்றும் அரசு உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

*******

வெளியீடு : இயக்குநர், செய்தி-மக்கள் தொடர்புத்துறை, சென்னை-9
நாள் : 11.10.2012